என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்

***47473—டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதி, தக்கலையிலிருக்கும் பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து செயற்குறிப்பு எதுவும் பெறப்படவில்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

2016 ஜனவரி 21]

முற்பகல் 11–05

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் பண்டைய திருவிதாங்கூர் கொச்சின் மாநிலத்தின் தலைநகரமாக இருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாகும். மன்னர் ஆட்சியின்போது அமைக்கப்பட்ட அரண்மனை தற்போது பத்மநாபபுரத்தில் எழில்மிகு தோற்றத்துடன் காணப்படுகிறது. தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் நவீன வசதியுடன்கூடிய புதிய கட்டடங்கள் கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டது. குமரி மாவட்டத்தில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் நாகர்கோவிலில் இன்னும் இருந்து வருவதால், பொது மக்களின் வசதியைக் கருத்தில்கொண்டு, மாவட்டத்தின் மையப் பகுதியான தக்கலையிலுள்ள கட்டட வசதியுடன்கூடிய பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 170 புதிய நீதிமன்றங்கள் 134 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், 46 புதிய நீதிமன்றங்களை 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 119 நீதிமன்றங்கள் மட்டுமே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 216 நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2016 ஜனவரி 21

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் புதிய கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர் நீதிமன்றத்திடமிருந்து எவ்வித செயற்குறிப்பும் இதுவரை பெறப்படவில்லை. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பத்மநாபபுரத்தில் வாழும் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, புதிய குற்றவியல் நீதிமன்றத்தை 67 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்க கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் விதி எண் 110–ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். இந்த நீதிமன்றம் அமைக்க அரசாணை எண் 953, உள் துறை, நாள் 23–12–2015–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.*

டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் குடும்ப நல நீதிமன்றம் இல்லாததால், தக்கலையிலுள்ள பத்மநாபபுரம் சார்பு நீதிமன்ற வளாகத்தில் குடும்ப நல நீதிமன்றம் (Family Court) அமைக்க வேண்டும். தக்கலையில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஒன்றுதான் இருந்து வருகிறது; 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் இன்றைக்கு நிலுவையில் இருந்து வருகின்றன என்பதைக் கருத்தில்கொண்டு, ஒரு துணை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தை அங்கே அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விரைவில் நீதி கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிமன்றங்களுக்கான புதிய கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் மற்றும்*

உட்கட்டமைப்புகளை உருவாக்கவும், மேம்படுத்தவும் இதுவரை 451 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மகத்தான சாதனையைப் படைத்துள்ளார்கள். பத்மநாபபுரம் மற்றும் தக்கலையில் புதிய துணை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் குடும்ப நல நீதிமன்றம் அமைப்பது குறித்து சென்னை உயர் நீதிமன்றத்திலிருந்து எந்த செயற்குறிப்பும் இதுவரை பெறப்படவில்லை. புதிய கூடுதல் அமர்வு நீதிமன்றம், குடும்ப நல நீதிமன்றம், துணை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைப்பது குறித்து உயர் நீதிமன்றத்திடமிருந்து செயற்குறிப்பு பெறப்படும்பட்சத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

11—

கால்நடைக் கிளை நிலையம்

***51654 திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலைப் பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலைப் பகுதியிலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அங்கே செயல்பட்டு வந்த ஊரகக் கால்நடை மருந்தகம், 1–4–2013 முதல் கால்நடை மருந்தகமாகத் தரம்